474

Registerec

474

" SIDDHANTHAM "
Vol. 15 No. 11

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 DEC 1942
MADRAS

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் 15 | சித்திரபானு ஆண்டு கார்த்திகைத் திங்கள்<br>1942ஆம் நவம்பர்மீ | இதழ் 11 |
|---|---|---|

| உள்ளுறை | | பக்கம் |
|---|---|---|
| திருஞானசம்பந்தர் வாழ்க்கை | ... | 401 |
| வாழ்க்கையும் சமயமும் | ... | 411 |
| சிவஞான சித்தியார் சுபக்கம் மூலமும் சிவாக்கிர யோகிகள் உரையும் | ... | 417 |

பத்திராசிரியர் : திரு. வி. உலகநாத முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்

4, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

1942 தனிப் பிரதி அணா 4.

ஒ 3L

RB73ணா21, N2885
M42.15.11.
189783

உ
சிவமயம்

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்

## 37-வது ஆண்டு நிறைவுவிழா, சீகாழி

இவ்விழாவும் சைவர் மகாநாடும் சீகாழியில் 1942ஆம் டிசம்பர்மீ 25, 26, 27-ம் தேதிகளில் மஹா மஹோபாத்யாயர் - பண்டித மணி - சைவத் திருவாளர் - மு. கதிரேசச் செட்டியாரவர்கள் தலைமையிலும், சைவ இளைஞர் மகாநாடு சென்னை வழக்கறிஞர் சைவத் திருவாளர் கா - இராமநாதன் செட்டியார், பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமையிலும் நடைபெறும். விரிவான நிகழ்ச்சி முறை அடுத்த இதழில் வெளிவரும்.

என். இரத்தினசபாபதிப் பிள்ளை — வரவேற்புக் காரியதரிசி
ம. பாலசுப்பிரமணியன் — சமாஜப் பொதுக் காரியதரிசி

## சமாஜ அறிக்கைகள்

1. இப்போதுள்ள காகிதப் பஞ்சம் அகலவில்லையை முன்னிட்டு "சித்தாந்தம்" பத்திரிகையை நடத்துவதா, நடத்துவதானால் எம்முறையில் நடத்துவது என்பது முதலியவற்றைத் தீர்மானிக்க நமது சமாஜப் பொதுக் கூட்டம் ஒன்று 1942ஆம் டிசம்பர்மீ 5உ சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்த ஜனசபையின் 'குகாநந்த நிலையத்'தில் நடைபெறும். அன்று போதிய கூட்ட நிறைவெண் (Quorum) இல்லாவிடில் அக்கூட்டம் அதேயிடத்தில் அடுத்த நாள் மாலை அதே மணிக்குக் கூடி வருவோரைக் கொண்டு முடிவு செய்யும். கூட்டத்துக்கு வர இயலாதவர்கள் தங்கள் கருத்தைக் கடிதம் வாயிலாக அறிவித்தருள்க.

2. நமது சமாஜ நிர்வாக சபைக் கூட்டம் ஒன்று ஷை இடத்தில் 1942ஆம் டிசம்பர்மீ 12உ சனிக்கிழமை மாலை 6 மணிக்குக் கூடி ஆண்டு அறிக்கை, ஆண்டுக் கணக்கு முதலியவற்றை அங்கீகரிக்கக் கூடும். நிர்வாக சபை உறுப்பினரனைவரும் வேறு தனி அறிக்கையை எதிர்பாராது வருக.

3. நமது சமாஜத்தின் சைவத்தேர்வுகள் (22-12-42-ல் திருக்கார்த்திகை தீபம் நிகழ்தலால்) 29-11-42 ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறும்.

Reg. M. 2330

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 DEC 1942
MA

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபோ னம்பலவன்
ஞானதரு வாணியையுள் நாடு.

| | | |
|---|---|---|
| மலர் 15 | சித்திரபானுஆண்டு கார்த்திகைத்திங்கள் 1942ஆம் நவம்பர்மீ | இதழ் 11 |

## திருஞானசம்பந்தர் வாழ்க்கை*

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்"

### ஒளி நிகழவல்ல கால நிலை

பண்டைக்காலம் முதலாக உலகத்தில் பெரியார்கள் தோன்றிப் பல அரிய பெரிய செயல்களைச் செய்து உலகினரை ஈடேற்றி யுள்ளார்கள். அவர்களது அரிய பெரிய செயல்களைச் செவ்வையாய் அறிய வேண்டுமாயின் அவர்கள் தோன்றிய காலநிலையை நன்றாக அறிதல் வேண்டும். செயல்களின் அருமை பெருமை, காலநிலையின் அவசியத்தைப்

* இது மயிலைத்தமிழ்ச் சங்கத்தில் நடந்த நால்வர் மகா நாட்டின் முதல் நாளன்று கோவைகிழார் ம. இராமச்சந்திரனார் அவர்கள் செய்த சொற்பொழிவு.

பொறுத்தே இருக்கின்றது. வேறு காலங்களில் அச்செய்கைகளே பயனற்றும் போகக்கூடியவை. ஆகவே, காலநிலை அறிய வேண்டியது அறிஞர்களின் சிறந்த படிப்பாகும். சம்பந்தப் பெருமான் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தோன்றியவர். அவரது அரிய செயல்களை அறிவதற்கு அக்காலத்தில் தமிழ் நாடு இருந்த சமயநிலையை அறிதல் வேண்டும். தமிழ் நாடு மிகப் பண்டையநாடு. தமிழருடைய வரலாறும் மிகப் பழமையதே. ஏனைய மொழிகள் பிறக்காததற்கு முன்பே தமிழ்மொழி சிறந்து வளர்ந்த பெருமை கொண்டது. தமிழர் இயற்கைச் சமயத்தையே தம் சமயமாகக் கொண்டிருந்தனர். அச்சமயக் கொள்கைகள் எக்காலத்திலும் எம்மக்களுக்கும் ஏற்றுக்கொள்ளத்தகுந்த உண்மைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன. தொல்காப்பியனார் வரையறைகளையும், சங்கத்தார் உறுதி மொழிகளையும், திருக்குறளாரின் பொதுப்படையையும் உண்டாக்கியவர்களின் சமயக்கொள்கைகள் எத்தனைப் பொதுநோக்கையும், உண்மைகளையும் உட்கொண்டிருக்க வேண்டும். அவ்விதச் சமயக் கொள்கைகளைக் கொண்ட தமிழ்நாட்டிற்கு வடநாட்டிலிருந்து சில சமயங்கள் பரவி வந்தன. பௌத்தசமயம் வந்தது. ஆனால் அது ஒன்றிரண்டு நூல்களைத் தந்ததே தவிர அதிகமாக வேரூன்றவில்லை. அருகசமயம் வந்தது. அது தமிழ் மொழிக்குப் பலநூல்களைத் தந்தது மன்றி, தமிழ் நாட்டின் அரசியலிலும் புகுந்து கலக்கம் செய்து விட்டது. அதன் காரணமாகவே பண்டைச் சமயத்துக்குப் புத்துயிர் தோன்றி வைதிக சைவம் மேலோங்கும் காரணமும் ஏற்பட்டது. அக்காரணத்திற்குக் காரியகர்த்தர்கள் சம்பந்தர் முதலிய சைவ சமயாசாரியர்கள். சங்கத்தார் காலத்தில் தமிழ்நாட்டை ஆண்டுவந்தவர்கள் சேர, சோழ, பாண்டியர்கள் என்ற தமிழ் மூவேந்தர்கள். அவர்கள் தமிழ் மொழி, தமிழ்ச் சமயம், தமிழர் நாகரிகம் இவைகளைப் பொன்னேபோலப் போற்றி வந்தார்கள். பிறகு சேரநாடு தனி[illegible]ந்துபோயிற்று. பாண்டியர் ஆதிக்கம் குறைந்தது. [illegible]ந்தது. பல்லவர் மேலோங்கினர். இவர்கள்



மூன்றாவது நூற்றாண்டு முதல் எட்டாவது நூற்றாண்டு வரை மிகுந்த சிறப்போடு ஆண்டனர். அவர்கள் வடநாட்டிலிருந்து பல கொள்கைகளையும், வடமொழியையும் தமிழ் நாட்டிற்குக் கொண்டுவருவதற்குக் காரணமாயிருந்தனர். சில பல்லவ மன்னர்கள் வடமொழிப்பயிற்சியில் சிறந்தவர்கள். அவர்கள் பெயர்களைக் கேட்ட அளவிலே அவர்கள் கொள்கைகளையும் அறியலாம். அவர்கள் காலத்தில்தான் வடநாட்டிலிருந்து சமணசமயம் அதிகமாகத் தென்னாட்டிற்கு வந்தது. சம்பந்தர் காலத்துப் பல்லவன் சமணசமயத்தைத் தழுவினான். அதுகண்டு வலி குறைந்திருந்த பாண்டிய நாடும் பின்பற்றியது. அரசன் சென்ற வழி மக்களும் சென்றனர். வைதிக சமயம் அடியோடு போய்விட்டது. அதனைப் பிழைப்பிக்கவே சம்பந்தர் தோன்றிச் சமயப் பிரசாரம் செய்தனர். தென்னாட்டிற்கு வந்த சமணம் ஆதியிலே அதன் ஆசிரியர்கள் போதித்த சமயமல்ல. பிற்காலத்தில் களைகளாக முளைத்த பல ஆபாசக் கொள்கைகளையும் வழக்கங்களையும் தழுவிக்கொண்ட ஒரு சமயமாகும். ஆதலால் தான் அவ்விதம் சீர்கெட்ட சமயத்தைப் பரவாமல் தடுத்துப் பண்டைச் சமயத்தை விளக்க முயன்றார்கள் சமயாசாரியர்கள்.

## உயரிய வாழ்வின் நோக்கம்

ஆபாசக் கொள்கைகளையும், மூடப்பழக்க வழக்கங்களையும் அறவே ஒழித்து நல்லொழுக்கங்களைக் கொண்ட சமயத்தைப் பரப்புவதே சமயாசாரியர்களின் வாழ்க்கை நோக்கமாகும். உயிர்களை வதைக்கக்கூடாதென்ற கொள்கை கொண்டு கிருமிகள் மாய்ந்துபோகுமே என்று சொல்லி பல் விளக்காதிருத்தல், தவம் என்ற பெயரைக் கொண்டு தலை மயிரைப் பிடுங்குதல், உடல் அழகைக் கெடுத்தல், ஊணைச் சுருக்கி உடலை உலரவைத்தல், சுத்தமாக வீடு மனைவைக்காது அசுத்தமாக வைத்தல், பிறந்த மேனியில் இருத்தல் முதலிய பல வெறுப்பான வழக்கங்கள் பரவத் தொடங்கின. இவைகளை ஒழித்து உண்மையான ஞானம் மக்களுக்குப் புகட்ட வேண்டிக் கடவுள் ஞானத்தை மக்களுக்குச் சம்பந்தப்படுத்

தியதனால் ஞானசம்பந்தம் ஏற்பட்டது. அதுவே வாழ்க்கை நோக்காகக் கொண்டார் ஞானசம்பந்தர். அப்பெருமான் மக்களைக் கடவுளிடம் ஞானம் என்ற கயிற்றினாலே சம்பந்தப் படுத்தினார் என்க.

## அந்நோக்கத்திற்கேற்ற வசதிகள்

இளவயதும், சுருங்கிய காலமுமே நல்லியக்கங்களுக்கு உறுதி தரத்தக்க சந்தர்ப்பங்களாகும் என மக்கள் வரலாறுகள் கூறுகின்றன. உலகில் தோன்றிய பெரியார்கள் அனைவரும் அச்சந்தர்ப்பங்களையே பெரிதாகப் போற்றிவந்தனர். கிறிஸ்து பெருமான் மூன்று ஆண்டுகளிலும், மகமதுநபி பத்து ஆண்டுகளிலும் தந்தம் கொள்கைகளை வெற்றிகரமாக நாட்டினார்கள். மெய்கண்டதேவர், சங்கரர் முதலியோர் இளவயதிலேயே அருள் வாக்களித்தார்கள். இளவயதிலும் குழவிப் பருவமே பிறரைக் கவரக்கூடிய பருவமாகும். நெஞ்சு உலக பந்தத்தில் ஈடுபடாமல் நிர்மலமாக இருக்கையிலே அது மக்கள் அனைவரையும் கவர்ந்து ஈடுபடச் செய்யக் கூடும் அல்லவா? அது கொண்டே கிறிஸ்துவும் குழந்தைகளின் மகிமையை எடுத்தாண்டிருக்கின்றார். சம்பந்தரும் குழந்தைப் பருவத்திலேயே தம் அருந்தொழிலை ஏற்றுக் கொண்டார். தம் தகப்பனார் தோள்மீது அமர்ந்து கொண்டும், பிறகு பல்லக்கில் ஏறிக்கொண்டும் ஆலயங்கள் தோறும் சென்று சமயப் பரப்பினைச் செய்தார். ஆகவே இளமைப் பருவமே சான்றதென அவர் வாழ்வில் அறிகிறோம். அதுவே அருந்தொண்டுக்கு ஏற்புடையதாக இருந்தது. பல்லாயிரக் கணக்கான மக்கள் அவரது புனித வாழ்க்கையிலே ஈடுபட்டு முன்னேறினார்கள். நாடும் களை பிடுங்கப்பட்டு நன்னிலைமை யடைந்தது. மேலும், இளமை கவர்ச்சிக்கு மாத்திரமேயன்றி இடையறா ஊக்கத்திற்கும் ஏற்றதாகும். தற்காலத்திலும் இளமை இயக்கம் உலகெங்கும்பரவி அற்புதமான வேலை செய்துவருகிறது. சம்பந்தரும் பதினாறுவயதிற்குள்ளாக, பல்லாயிரக்கணக்கான ஆலயங்களைத் தரிசித்து ஆயிரக்கணக்கான பாடல்களை அருளிச்செய்து நாடெங்கும் தமிழும் சமயமும் பரப்பினார். இருளில் முழுகிக் கிடந்த மக்களை ஒளிக்குக்



கொண்டுவந்தார். சுருங்கியகாலத்தில் இளவயதில் வேறெவரே இவ்வாறு அளவு கடந்த செய்கைகளைச் செய்ய முடியும்.

## இயக்கத்திற்கு உதவிபுரிந்த மொழியின் வண்மையும் இசையின் மேன்மையும்

உயரிய எண்ணங்களே மக்களை நல்ல வழிக்கு இழுக்கக் கூடியவை. அவ்வெண்ணங்களை வாக்கின் மூலமாகத்தான் வெளிப்படுத்தல் கூடும். அவ்வாக்கும் அவ்வெண்ணங்களை எளிதில் அறியக் கூடியதாக இருக்க வேண்டும். மக்களுக்குப் புரியாத மொழியிலும், வண்மையிலும் இருந்தால் அவ்வாக்கால் பயன் இராது. மக்களுக்குத் தெரிந்த மொழியிலும், விளங்குகின்ற வண்மையிலும் இருந்தால் அது கேட்கும் மக்களை எளிதில் வசப்படுத்தும். அக்காரணத்தை உட்கொண்டே சம்பந்தர் அழகான தமிழ்ப் பாடலில் தம் எண்ணங்களை வெளியிட்டார். தற்காலத்தில் ஆலயங்களில் உச்சரிக்கும் வடமொழி மந்திரங்களைக் கேட்டு மக்கள் பொருள் அறியாமல் சந்தேகத்துடன் திகைக்கிறார்கள். அவைகளையே அழகான தமிழில் கூறினால் மக்கள் ஆதரிப்பார்கள். அக்காரணங் கொண்டே துதிப் பாடல்களைச் சம்பந்தர் தமிழ்ப்பாவில் பாடினார் போலும். அஷ்டோத்தர சதம் முதலியவைகளின் தமிழ்க் கூற்றே தேவாரங்களாகும் என்றால், தற்காலத்தில் படித்த தமிழர் மனதில் எழும்பும் கிளர்ச்சியை அக்காலத்திலேயே சம்பந்தர் அறிந்து அதனைப் போற்றினார் எனில் மிகையாகாது. மேலும், இசையே மக்களைக் கவரக்கூடியது. தற்காலத்திலும் பிற மதத்தினர் இசைக் கருவிகளின் உதவியால் சமயப் பிரசாரம் செய்வதை நாம் அறிகிறோம். அதன் உண்மையைக் கொண்டு சம்பந்தர் தம்பாடல்களை அழகிய தமிழ்ப் பண்ணால் பாடினார். திருநீலகண்ட யாழ்ப்பாணரைத் தம்முடன் அழைத்துச் சென்று அவரது யாழொலிக்கு இசையப் பாடினார். அவ்விசையைக் கேட்க ஏன் பல்லாயிர மக்கள் வரமாட்டார்கள்?

மேலும் பாட்டுக்களில் வெறும் துதியேயன்றி அருமையான உண்மை மொழிகளையும் வைத்துள்ளார்கள். உலகத்

திற்கு நல்லொழுக்கத்தையும், நன்னெறிகளையும் போதித்துள்ளார். இதுமாத்திரமோ? மேன்மையாக அகம், புறம் முதலிய துறைகளையும் அமைத்துள்ளார்கள். அதனைக்கண்ட எப்புலவனும் வியப்படைவான். ஆகவே புலவர்க்கும், பாமரருக்குமாக அவர்பாடல்கள் பயன் தந்தன. உலகமே அவர் பாவில் ஆழ்ந்துவிட்டது.

## இயக்க வளர்ச்சிக்குகந்த பண்புகளான அன்பும் இன்பமும் ஆண்டமை

உலகம் அன்பும் இன்பமும் பொருந்தியதாம். அவை இல்லாத கடுந்தவமும், துன்பமும் ஒவ்வாதனவாம். சமணக் கூட்டத்தை மக்கள் வெறுத்தார்கள். அன்புமிகும் சைவ வைணவத்தைக் கண்டு போற்றினர். துறவறத்தைக் காட்டிலும் இல்லறமே மனிதற்குரியது. திருமணமும், காதலும் மக்கட்கியல்பானவை. இவ்வியற்கை மதத்தையே நல்லதெனச் சம்பந்தர் விளக்குகிறார். தம் நூலில் அக இலக்கணத்தை அழகுடன் அமைத்ததன்றித் தாமும் உலகத்தோடொத்து வாழத் திருமணம் புரிந்துகொண்டார். சிற்றின்பத்தைக் கடந்து பேரின்பத்திற்கு வழிகாட்டினார். இவ்வுலகில் இயற்கைப் போதனையை என் மக்கள் பின்பற்ற மாட்டார்கள். ஆகவே ஒழுக்கமும் இயற்கை அன்பும் மேவிட்ட சைவம் உலகத்திலே பரவத் தொடங்கிற்று.

## மக்கட்கறிவுறுத்திய சித்தாந்த ஞானமும் அதன் கொள்கைகளும்

அழகான பாடல்களில் நடுநடுவே அருமையான சித்தாந்தக் கொள்கைகளைப் பொன் நகையில் மணி பதித்தாற்போல வைத்திருக்கின்றார். பாடுகிறவர்கள் நெஞ்சில் அவை நன்றாக ஆணித்திறம்போல் பதிந்துவிடும். மெய்கண்ட சாத்திரக் கொள்கைகளும், சிவஞான போதத்தின் உறுதிமொழிகளும் அவை தரப்பட்டதன் காலத்திற்கு முந்தியே சம்பந்தர் ஆண்டிருக்கின்றார். பன்னிரண்டு சூத்திரங்களின்



கருத்துக்களெல்லாம் பல தேவாரங்களில் மிளிரக் காணலாம். அவைகளைச் சொல்லாமல் சொல்லும் முறையைப்போல் வழங்கி இருப்பது அதி அற்புதமாகும். உலகில் ஞானிகள் அறிந்த தற்கால ஆராய்ச்சி முழுதும் சூத்திரங்களைப் போலச் சிறிய வாக்கியங்களிலே தேவாரங்களில் அமைந்திருப்பதே அம்மொழிகளின் தெய்வீகத்தன்மையை வெளிப்படுத்தும். இதனைக் கண்டன்றோ பட்டினத்தார் மூவர் மொழியை "வித்தகச் செய்யுள்" என்றருளினர்.

## மக்களை இழுக்க அரசியலையும் ஆட்படுத்திய திறம்

சமயக் கொள்கைகளைப் பரப்புவதற்கு அரசியலார் உதவியே சிறந்தது. மன்னன் எவ்வழி குடிகளும் அவ்வழி என்பதே உலகவழக்கு. அக்காலத்தில் இது உண்மையாக இருந்தது. பல்லவ பாண்டியர்கள் சமணர்களானார்கள். அப்பர் பல்லவனைத் திருத்தினார்; சம்பந்தர் பாண்டியனை வழிக்குக் கொண்டு வந்தார். உடனே நாடு முழுதும் சைவமயம் ஆகிவிட்டது. திருப்பின முறைக்கும் பெரியதும் கடினமானதுமான கழுவாய் இல்லை. திருநீறும், ஐந்தெழுத்துமே போதிய குறிகளாம். எத்தனை எளியமுறை! அது இக்காலத்தில் ஏற்குமா? ஆனால், அக்காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இக்காலத்தில் அக்கழுவாய் ஏற்பட்டால் எத்தனை சிறந்த சகோதரர்களை நாம் மீட்டுக் கொள்ளலாகாது. சரித்திரத்தில் இக்கழுவாய் சொல்லப்பட்டது. ஆனால் நாம் மறந்தோம். சுயநலமே அதற்குக் காரணம். இச்சுயநலம் எப்போது தொலையுமோ அப்போதுதான் நாட்டிற்கு நற்கதி கிடைக்கும். சம்பந்தர் தந்த நல்லொழுக்கத்தைப் பின்பற்றுவோமாக.

## சமயநிலைகளின் மேன்மையும் அவசியமும்

இவ்விதம் சமய உண்மைகளை எடுத்து ஆண்ட சம்பந்தர் அச்செயல்களைப் பரப்புவதற்கு வேறு துறைகளிலும் பாடுபட்டார். சமயமேம்பாட்டிற்குச் சமயநிலையங்கள் அவசியமெனக் கண்டார். பண்டை இந்தியாவில் ஆலயங்கள் கிடையா.

பௌத்த சமணர் ஆலயங்களைக் கட்டி உருவ வழிபாடு செய்தனர். அச்சமயங்களை வென்று வைதீக சமயத்தை நிலைநிறுத்தின சம்பந்தர் ஆலய வழிபாட்டின் மேன்மையை எடுத்துக்கொண்டு ஆதரித்தார். நாடுமுழுதும் ஆலயங்களைக் கண்டு வழிபட்டார். இதனால்ஆலய வழிபாடு சிறப்புற்றோங்கியது. அரசர்களும், பொதுமக்களும் அதனை அதிகமாகப் போற்றத் தொடங்கினர். அதுமுதல் பாடல்பெற்ற தலங்கள், வைப்புத் தலங்கள் ஏற்பட்டன. சோழர்கள் இக்கொள்கைகளை அதிகப்படுத்தினார்கள். அதனால் சித்திரமும், சிற்பமும் இந்நாட்டில் அதிகரித்துப் பலகலைகளும் விருத்தியடைந்தன. சமயப் பெருக்குக்கு நிலைத்த சின்னங்கள் ஏற்பட்டன. ஏனைய சமயத்தார்களாலே சமணம் அழிவு பெறவில்லை. ஏனெனில் சமண ஆலயங்களே அச்சமயம் நிலை நிற்றலுக்கு ஒருவாறு காரணம் எனலாம். பல நூற்றாண்டுகளாகப் பல பேர் எதிர்த்தும் ஏன் அம்மதம் இன்னமும் இருக்கிறது. ஆலயங்களிலிருந்து தான். அது போல சைவமும் மேன்மை பெற்றது என்று கூறவேண்டும்.

## பிற சமயங்களின் ஆதரணையும், அவற்றிலும் கண்ட உண்மையும்

சம்பந்தர் சமண சமயத்தை எதிர்த்து அழித்தார் என்ற ஒரு கொள்கை தமிழருக்குள் பரவிக் கிடக்கிறது. இது சரியானதல்ல. சைவத்தினுடைய ஒப்பற்ற கொள்கை அன்பு. அன்பு இருந்தால் ஏனையரை வெறுக்க முடியுமா? ஆகவே அன்பே மயமான சம்பந்தர் சமணத்தை வெறுப்பாரா? இல்லவே இல்லை. மேலும் சைவம் தாய்ச் சமயமாகும். ஏனைய சமயங்கள் அதன் குழவிகள் போலாகும். குழவிகள் ஞானத்தில் தேர்ந்திருக்க முடியாது. பக்குவமடையாத குழந்தைகளைத் தாய் வெறுப்பதுண்டா? சைவம் முப்பத்தாறு தத்துவங்களும் பூரணமாகக் கொண்டது. ஏனைய சமயங்களோ அதற்குக் குறைந்த தத்துவங்களைக் கொண்டவை. ஞானம் முதிர முதிர அவைகளும் தாயைப் போல் பக்குவமடையக்கூடும். ஆகவே சைவம் ஏனைய மதங்



களைத் தழுவி அவைகள் விருத்தியடையுமாறு போதிக்கும். ஆகவே சைவ சமயாசாரியரான சம்பந்தர் குறைந்த தத்துவங்களைக் கொண்ட சமணத்தை வெறுக்கமாட்டார். ஆதிச் சமணக்கொள்கைகளில் எவருக்கும் வெறுப்பு இல்லை. இருக்கவும் முடியாது. ஜீவகாருண்யம், தவ ஒழுக்கம், சீலம், கடவுட்டன்மை இவைகளில் யாருக்கு அபிப்பிராய பேதம் உண்டு? சைவர்களுக்கு இல்லை. ஆனால் அச்சமயம் பெருநிலையையடையவில்லை. அது அடையட்டும் என்ற சீரிய கொள்கையே சமயாசாரியாருக்கு இருந்தது. ஆனால் சம்பந்தர் வெறுத்தது என்ன? சமயத்தின் பெயரால் முளைத்து அச்சமயத்தை ஆபாசமாக்கிய கெட்ட அப்பியாசங்களாகிய களைகளையே தான். அவைகளையே சம்பந்தர் வெறுத்துப் பாடியிருக்கிறார். இதையறிய தேவாரங்களைப் படிக்கவேண்டும். அக்களைகளை வேரறுக்கவே அடிக்கடி முரசு அறைந்திருக்கிறார். சமண சமயமே பொய்யானால் சம்பந்தர் முதலியோர் வெறுத்த பிறகும் அது உயிருடன் இருக்குமா? இன்னும் இருக்கின்றதே. சம்பந்தருக்குப் பிந்தியும் பலசமண ஆசிரியர்கள் தோன்றித் தமிழுக்குப்பாடுபடவில்லையா? சம்பந்தர் களைகளைப் பிடுங்கின பிறகு அச்சமயமும் சுத்த நிலைக்கு வந்து தழைத்து, பவணந்தி, மண்டலபுருடர், அடியார்க்குநல்லார், கார்மேகக் கவிஞர் முதலியோரை உண்டாக்கியதை அறியுங்கள். ஆகவே சம்பந்தர் சமணத்தை இரக்கத்துடன் ஆதரித்தார். களைகளை வெறுத்துத் தூய தாக்கினார் என்று அறியவேண்டும்.

## தொண்டரோடு கூட்டுக் காணல்

சம்பந்தர் தன்னந் தனியே இப்பெரிய இயக்கத்தில் ஈடுபடவில்லை. அக்காலத்திலிருந்த அடியார்கள் அனைவரையும் தம்முடன் கூட்டிக்கொண்டார். இதில் வகுப்புப் பேதம் பாராட்டக் கிடையாது. வேளாளராகிய அப்பரை அப்பரெனக் கொண்டார். கடை வகுப்பினரான யாழ்ப்பாணரை உடன் அழைத்துச்சென்று தம் சகபாடியாக்கிக்கொண்டார். அந்தணர் வீட்டிலும் இடம் தந்திருக்கிறார். அந்தணர்களான

முருக நாயனார், திருநீலநக்க நாயனார், போர் வீரரான சிறுத்தொண்டர் முதலானவர்களைத் தம் திருத்தொண்டர்களாக்கிக் கொண்டார். ஆகவே தான் தாம் எடுத்துக்கொண்ட காரியம் சித்திபெற்றது. நல்ல காரியத்துக்குப் பலரையும் கூட்டிக்கொண்டாலல்லவோ நன்மை பயக்கும்?

## அற்புதச் செயல்களும் கருணையும்

உலகில் எப்பெரியாரும் அற்புதங்களைச் செய்தே வெற்றியை நாட்டுவார்கள். சமயப் பெரியார்களின் சரிதங்களில் இதைக் காண்கிறோம். அவர்கள் செயல்கள் நமக்கு அற்புதமாகத் தோன்றுகின்றன. ஆனால் அப்பெரியார்களுக்கு அவை இயற்கையே தவிர அற்புதங்கள் அல்ல. சுய நலத்திற்குச் செய்தால் அற்புதமாகும். அல்லவேல் அவை இயற்கையே. பிற மக்கள் வருந்தினால் அவ்வருத்தத்தை நீக்கவே அற்புதம் செய்வார். இது இரக்கத்தின் பாற்பட்டது. காருண்யமே தவிர வேறல்ல. பாம்பு கடித்து இறந்த வணிகனை ஒரு பெண்ணுக்காக இரங்கி எழுப்பினதும், நீறான பூம்பாவையின் உயிரை அவள் தகப்பனுக்காக எழுப்பினதும் முதலிய செய்கைகள் பெருமைக்காக வல்ல. கருணையைக் காட்டும் பொருட்டேயாகும். இத்தகைய சான்றுகளே சமயப் பிரசாரத்திற்குத் தகுந்த ஆதரவுகளாகும். ஆகவே சம்பந்தர் இவைகளை மக்களின் ஈடேற்றத்திற்காகவே கையாண்டனர் என்க.

## சமயத்திற்குச் சிறந்த பண்புகளை அளித்தல்

இப்பெரும் அரிய செயல்களைச் செய்ததனால் அல்லவோ சைவம் இப்பொழுது விளங்கிக்கொண்டிருக்கிறது. இதற்கு மூல புருடர் உலகில் என்றென்றும் மறவாத இன்ப நிலையாகிய நன்னிலையிலே இருப்பார் அல்லவா? ஞான சம்பந்தர் தம் வாழ்க்கையின் திறத்தால் சைவத்திற்கு ஒரு புத்துயிர் தந்தார். அவருக்கு முந்தியும் தற்காலத்தில் இருப்பதுபோல சைவம் முன்னேற முடியாத சமயமாக இருக்கவில்லை. அவர் அவ்வாறு கொள்ளவுமில்லை. அதனைப் பரவும்



சமயமாகவும், பலரைத் தனக்குள் இழுத்துத் தூய்மைதரும் சமயமாகவும், கெட்டவர்களையும், தவறினவர்களையும் இழுத்துச் சேர்த்து ஒழுங்குள்ளவர்களாக்கிய சைவமாகவும் அதனை முற்படுத்தி ஆண்டார். சம்பந்தர் தம் வாழ்க்கையில் பாராட்டிய சைவமே நமக்குத் தகுந்த சமயமாக நம் தமிழர் கொள்ளுவார்களாக.

# வாழ்க்கையும் சமயமும்

[கா. இராமநாதன் செட்டியார், பி. ஏ., பி. எல்.]

(மலர் - 15 - இதழ் - 10 - 375-ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றாவது படி : இப்படியிலுள்ளவர்களின் அன்புக்கு எல்லையில்லை. "உலகெலாம் உய்ய" வும் "ஞாலமெலாம் குடி வாழ" வும் வேண்டுவர் இப்படியிலுள்ளோர். நல்லார்க்கும் பொல்லார்க்கும் நன்மையே செய்வர். கோலக்கா வென்னும் பதியை

"கோயிலாக்
கொண்டான் பாதங் கையாற் கூப்பவே
உண்டான் நஞ்சை உலக முய்யவே" —சம்பந்தர்

கும்பிட்டா ரல்லாதாரும் உய்ய நஞ்சுண்டகண்டன். அவனடியாரும் அவன் வழி.

24. இம்மூன்று படியும் சேர்ந்தது நல்வழி. இவ்வழி பிறர் நலத்திலேயே நாட்டமுடையது. இவ்வழி மிக நாகரிகமானது; புண்ணியந்தருவது; ஒழுங்கு வரம்புக்குட்பட்டது; அறிவு வளர்ந்தோர் கடைப்பிடிப்பது; சமூக நன்மையும் உலக நன்மையும் பயப்பது.

25. ஆனால் இதில் ஆணவம் தடிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். செய்கையில் செயலின்மையும், செயலின்மையில் செய்கையும் காணவேண்டும்.

"கருமப்பயனைச் சிறிதுங்கருதாது எப்போதும் திருப்தியுடன் எதிலும் சார்பற்று நிற்போன் செய்கை செய்து

கொண்டிருப்பினும் செயலற்றவனாவான்"—கீதை iv 20. பற்றற்று, மனத்தை ஞானத்தில் வைத்து, தொழிலை வேள்வியெனக் கருதிச்செய்ய வேண்டும்.

"என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்று அழகாக அப்பர் சுவாமிகள் அருளினார். இப்பணியை இறைவன் பணியெனக் கொள்ளவேண்டும்.

26. இனி மூன்றாவது வழியைக் கவனிப்போம். "தன்னலந் தேடேன். பிறருக்கு நல்லபணி எதுவெனத் தெரியாது. நான் செய்வது பிறருக்குத் தீமையாகலாம். பிறருக்கு நன்மை செய்வதுதான் இறைவன் ஆணையென்று எனக்குத் தெரியவில்லையே, அவனது ஏவலையே ஒவ்வொரு நிமிஷமும் நாடி நிற்பேன். எனக்கென்று நல்ல வேலையோ கெட்ட வேலையோ கிடையாது" என்பது மூன்றாவது வழி.

"என்னை ஆண்டுகொள், விற்றுக்கொள், ஒற்றிவை" என்று சொல்லுகிறவர்களும், ஊடுவதற்கும் உவப்பதற்கும் இறைவனைத்தவிர வேறொருவரையும் அறியாதவர்களும் இவ்வழியைப் பின்பற்றியவர்கள். (Unitarianism) யூனிடேரியானிஸம் என்ற மேல் நாட்டுக் கொள்கை இவ்வழியே.

இதனை அருள்வழியெனலாம். திருவருளை சேர வேண்டியவர்களுக்கு இவ்வழி யேற்படுகிறது. எல்லாவழியிலும் இறைவனுதவி நாடப்படுகிறது; கிடைக்கிறது. ஆனால் இவ்வழியில் தன்னலம் நாடப்படவில்லை. இவ்வழி நிற்போர் திருவருளால் முத்திகிடைக்காமல் நரகமே கிடைக்கினும் திருவருளையே வேண்டுவர். "நன்றே செய்வாய், பிழை செய்வாய், நானோ இதற்கு நாயகமே" என்று இறைவனைக் கேட்பர். பிறர் நன்மை நாடலும் அவர்கள் நோக்கமன்று. ஆண்டவன் காட்டும் வழி எவ்வழியாயினும் அவ்வழி நிற்பதே அவர்கள் நோக்கம். ஆகையால் இந்த வழியை அருள் வழியென்றோம்.

27. இவ்வழியில் மூன்று படி.

முதல்படி: ஆற்றல் முழுதும் உபயோகப்படுத்தி ஆண்டவன் ஆணைக்குக் காத்திருத்தல்.



"அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவன்தன்
அருள் நினைந்தே அழுங் குழவி யதுவே போன்று" —குலசேகரர்

இருப்பார்கள். இது இறைவன் ஏவலுக்குப் பசித்திருக்கும் காலம். அப்பொழுது உற்றாரை வேண்டார், ஊர் வேண்டார், பேர் வேண்டார், யாதும் வேண்டார். புனிதன் அருளைத் தவிர மற்ற யாவும் புளிக்கும்.

இரண்டாவது படி: இறைவன் ஆணையிலிருந்து சிற்சில சமயங்களில் சில பணி பெற்று அதனைச் செய்வார்கள். பணி தரவில்லையானாலும் பாதகமில்லை. "They also serve that stand and wait" - *Milton*. அதாவது ஆணைக்குக் காத்துக்கொண்டு நிற்போரும் கைங்கரியம் செய்பவர்கள்.

மூன்றாவது படி: 'சித்தம் சிவ'மான நிலை. அந்நிலையடைந்தோர் 'செய்தனவே தவ'மாகும். செய்தனவென்று பன்மையில் சொன்னது நல்லனவற்றையும் அல்லனவற்றையும் குறிக்க. அன்னோர் செய்தனவெல்லாம் அறம்.

28. இம்மூன்று படியுஞ் சேர்ந்தது அருள்வழி. இது சமூகம் சீர்திருந்திய பின்னர் கண்ட வழி. இது நாகரிகத்தைக் கடந்தது. புண்ணிய பாவத்தைக் கடந்தது. ஒழுக்கத்தைக் கடந்தது. அறிவு பழுத்தவர்கள் அனுசரிக்க வேண்டிய வழி. பற்றை அறவே களைந்தவர் பற்றும் வழி.

29. ஆனால் அறிவு பழுக்காதவர்களும், ஆசை யறாதவர்களும் இவ்வழியை அனுசரித்தால், வருந் துன்பங்கள் பல. கடவுளாணை தந்ததாக வெண்ணி, தம் மதத்தில் பிறரைச் சேர வற்புறுத்தி, சேராதாரை அழிக்கின்றனர்; அழிப்பதால் புண்ணியமெனக் கருதுகின்றனர். இவ்வழி மிக ஆழமானது; அகண்டமானது; அபாயமானது. ஈனர்கள் தங்களுக்கு ஈசன் ஏதோ ஆணை தந்துவிட்டதாகச் சொல்வதுமுண்டு. அறிவுடையோரும் தூய வாழ்வு நடத்துவோரும் தவறாக பல சமயங்களில் இறைவன் ஏவலிருப்பதாக நினைக்கக்கூடும். இறைவன் ஒருபணியில் இவர்களை ஏவியிருப்பினும், முக்குணவசத்தால் கட்டுப்பட்ட மக்கள் அதனைத் திரித்துணர்தலுங் கூடும். மேலும் இவ்வழியில் சமயத்திற்கும் சமுதாயத்திற்

கும், சமயத்திற்கும் ஒழுக்கத்திற்கும் முரண்பாடுகளேற்படுதலுண்டு.

30. இம்மூன்று வழியிலுள்ளோரும் இறைவனைக் கெட்டியாகப் பிடித்தவர்களே. மூன்றும் முன்னர் வகுக்கப்பட்ட வழியே. மூன்று வழியிலும் இறைவனடியைத் திண்ணமாகச் சேரலாம்.

31. இவ்வழிகளிலுள்ள வித்யாசங்களை சில உதாரணங்களால் விளக்கலாம்.

ஒரு பையன் சாதாரணமாகத் தன்னையே கவனிக்கிறான். தாயும் தகப்பனும் தனக்காக வாழ்கிறார்களென்று நினைக்கிறான். தன் உடல் வளர உண்பதும், அறிவு பெறப் படிப்பதும், மனங்களிக்க விளையாடுவதும் தன் வேலையென்று நினைக்கிறான். இவனைப் போன்றவர்களே முதல் வழியிலுள்ளவர்கள். வழி வயதைப் பொருத்ததெனத் தவறாக எண்ணவேண்டாம். கிழவனாயிருந்தும் தன்னய மனப்பான்மையே கொள்ளலாம். சிறுவன் முற்றும் வெறுத்தவனாயிருத்தலுமுண்டு. வழி மனப் பக்குவத்தைப் பொருத்தது.

மனிதன் மனைவியையும், மக்களையும், சுற்றத்தாரையும், தெரிந்தோரையும், விருந்தினரையும், ஊராரையும், நாட்டாரையும், தேசத்தாரையும், ஒத்த கொள்கையினரையும், ஏழைகளையும், பிறரையும் காப்பாற்றும் கடமையுடையான். அவனைப் போன்றது இரண்டாவது வழி. அன்பு பெருகிப் பெருகி விரிந்து விரிந்து மனைவியிலிருந்து மாதொருபாகனார் படைத்த பொருளெல்லாவற்றிலும் செல்லவேண்டும்.

கிழவனார் தெருத் திண்ணையிலிருக்கிறார். வீட்டிலாசையில்லை. மகள் அவரிடம் வந்து "உங்கள் பேரன் சாப்பிடமாட்டேனென்று சொல்லுகிறான் வந்து மிரட்டுங்கள்" என்றால் அவர் வந்து மிரட்டி விட்டுத் திண்ணைக்குப் போய் விடுவார். மகள் வேலை சொன்னால் செய்வர்; சொன்ன விதம் செய்வர். சிறு பிள்ளையைப் பயப்படுத்துவது நல்லதாவென்றும் கெட்டதாவென்றும் யோசியார். ஆண்டவன் ஆணைக்குக் காத்திருத்தலும், ஏவலைச் செய்தலும் இங்கு காணலாம். இது மூன்றாவது வழி.



32. முதல்வழி, கல்லிடைப் பிறந்து அங்கு போகும் தீர்த்தம். தண்ணீர் அருந்த சீர்பெறாத பாதையில் போகவேண்டும். பலர் சேர்ந்து போகமுடியாது.

நடுவழி,

"பூவினுக் கணியாய் ஆன்ற பொருள் தந்து புலத்திற்றாகி
ஆவியத் துறைகள் தாங்கி யைந்திணை நெறியளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவி"

வெகுதூரம் ஓடும் நதிபோன்றது. இவ்வழி விளங்குவது. பொருளுள்ளது. பயன்படுவது. நல்ல விரிந்த துறைகள் பற்பல. அநேகர் ஒன்றாகச் சேர்ந்து போகலாம். இவ்வழியிலடைந்த நிலை சுலபமாகத் தெரியும்.

கடைசிவழி, "கடலிடைக் கலந்த தீர்த்தம்" ஆழம் அதிகம். வழி அபாயம்.

33. ஆரம்ப வழியை சம்பளமே கருதும் வேலைக்காரனுக் கொப்பிடலாம். அடுத்தவழி எஜமானன் வீட்டிலுள்ளாருக்கு நல்லதெனத் தனக்குப் படும் பணியைச் செய்தலுக்குச் சமம். கடைசி வழியை எஜமானனை மட்டும் நினைந்து, அவன் ஏவலுக்கே காத்திருந்து அதை மட்டுமே செய்தலுக்கு உவமிக்கலாம்.

34. காலத்திற் கேற்றது நடுவழி; சுலபமானது நடுவழி. பெரும்பாலார் பற்றக்கூடியதுமஃதே. இந்த அன்பு வழியை அனுசரித்த பின்னர் தேவையானால் அருள் வழிக்குச் செல்லலாம்.

35. இவ்வழிகளும் படிகளும் மயங்கி அதாவது கலந்து நிற்பதைக் காண்கிறோம். பெரும்பான்மையை உத்தேசித்தே வழியும் படியும் செல்லலாம்.

கீழே காட்டியுள்ள படம் இக்கட்டுரையின் சாரத்தை விளக்குகின்றது. சமயத்தையும் வாழ்க்கையையும் பிரிக்கப்படாதென்றும், சமயம் அனுஷ்டிக்கப் படவேண்டியதென்றும், அதை மூன்றுவழிகளாகக் கொள்ளலாமென்றும், அவை அவா வழி, அன்பு வழி, அருள் வழி யென்றும் ஒவ்வொரு வழியிலும் படி மூன்றென்றும், அவ்வழிகளுக்கும் படிகளுக்கும் உதாரணங்கள் யாவையென்றும், அவ்வழி

களின் பொதுத் தன்மை யாவையென்றும், அவ்வழிக்குள்ள வேறுபாடுகள் எவையென்றும், ஒவ்வொரு வழிக்குள்ள நயங்கள் யாவையென்றும் கண்டோம். அவா, அன்பு, அருள்—என்னும் மூன்று அகரங்கள் வழிகளை ஞாபகப் படுத்தும். ஆண், ஆறு, ஆள் - என்ற மூன்று ஆகாரங்கள் வழிகளின் தன்மைகளை ஞாபகப்படுத்தும். கப்பல், கழுதை, கனி - என்ற மூன்று ககரங்கள் சமயத்தை வாழ்க்கையி லின்று பிரித்தல் தவறென்பதை ஞாபகப்படுத்தும்.

| | | |
|---|---|---|
| 1 | அவா வழி<br>"தான்"<br>Spritualism | பிறவாவை<br>நன்மை<br>கெடுதல் |
| 2 | அன்பு வழி<br>"பிறர்"<br>Positivism | அன்பு மயம்<br>வரம்புள்ளது<br>சுற்றம், தெரிந்தோர் |
| 3 | அருள் வழி<br>"இறை"<br>Unitarianism | சித்தம் சிவமாதல்<br>இறை பணி<br>பசித்திருத்தல் |

| | | |
|---|---|---|
| கப்பல் | கழுதை | கனி |
| ஆண் மகன் | ஆறு | ஆள் |
| அவா | அன்பு | அருள் |

36. இவ்வழிகளையும் படிகளையும் விரித்தும் மாற்றியும் திட்டஞ்செய்ய முடியுமென நினைத்தலுங்கூடும். அதனை ஆராய்ந்து முடிவு கட்டவேண்டும். பின்னர் அப்படியில், அல்லது அவ்வழியில் நாம் நிற்குமிடத்தை முடிவு செய்யவேண்டும். அதனையறிந்து அடுத்த நிலைக்கு எப்பொழுது போவதெனத் தீர்மானிக்க வேண்டும். அவ்வாறு போவதற்கு முயலவேண்டும். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். தீது சிறிதுமிலா நன்றுடையார் நலமே தருவர்.

நெறியறியேன் நின்னையே அறியேன்
நின்னையே யறியும் அறிவறியேன்
உடையாய், அடியேனுன் னடைக்கலமே.

189783

# சிவஞான சித்தியார் சுபக்கம் மூலமும் சிவாக்கிர யோகிகள் உரையும்

(மலர் - 15 ; இதழ் - 10 ; 400-ம் பக்கத் தொடர்ச்சி)

மேல் இதற்கு உதாரணம்.

மேலைக்கு வித்து மாகி விளைந்தவை உணவு மாகி
ஞாலத்து வருமா போல நாம்செயும் வினைக ளெல்லாம்
ஏலத்தான் பலமாச் செய்யும் இதமகி தங்கட் கெல்லாம்
மூலத்த தாகி யென்றும் வந்திடும் முறைமை யோடே. 102

(உரை) மேலைக்கு வித்துமாகி விளைந்தவை உணவுமாகி ஞாலத்துவருமாபோல-[1]பனசாம்ரகர்ச்சூர திந்திரிணியாதி பலங்களானவைகள் இப்பொழுது புசிப்புமாய், [2]தத்பீசங்கள் மேலைக்கு வித்துக்களுமாய், பூமியின்கண் வருமாபோல; நாம் செயும் வினைகளெல்லாம் ஏலத்தான் பலமாச்செய்யும்-நாம் வாக்குமனசு காயங்களினாலே பண்ணப்பட்ட ஸ்தூல கருமங்கள் இவ்விடத்து நசிக்க, அவற்றினிடத்திலே நின்றும் சூக்கும ரூபமாக அதிருஷ்ட மென்றொன்று சனித்து, தத்தங் காலங்களிலே தனுவாதிப் பலங்களைப் பொருந்தப் பண்ணும். அந்தச் சூக்கும கருமத்திலே, சுசூக்கும மென்று ஒரு கருமமுண்டாய், அது கரும பீசமென்று பேராய், புத்திநிஷ்டமாய் நின்று, புண்ணிய கருமபீசம் புண்ணியத்தையும் பாபகருமபீசம் பாபத்தையும் பண்ணுவிக்கும். கருமமானது ஸ்தூலம் சூக்குமம் சுசூக்குமமென்று திரிவிதமாம்.

இதற்குச் சம்மதி ப்ரிவயர்மோத்தரே—அயர்மஹேஷா விஜ்ஞேயாஸ் சித்தவ்ருத்தி ப்ரஹேஷதஃ| ஸ்தூலாஸ் ஸூக்ஷ்மாஸ் ஸுஸூக்ஷ்மாஸ்ச கோடிஹேதை ரநேகயா ||—இதி.

இதம் அகிதங்கட்கெல்லாம் மூலத்ததாகி என்றும் வந்திடும் முறைமையோடே - இதம் அகிதமாகிய புண்ணிய பாவங்களுக்கெல்லாம் மூலகாரணமாகிய முறைமையை யுடைத்தாய், முத்திபரியந்தமும் முறைபிறழாமல் பொருந்திவருவதாகும் காரண கருமமானது.

கஉ

[1]பனசம் - பலா ; ஆம்ரம் - மா ; கர்ச்சூரம் - பேரீந்து ; திந்திரிணி - புளி ; பலம் - பழம். [2]தத்பீசம் - அதன் விதை.

### இருவினைகளையும் ஏற்றுப் பலனளிப்பவன் இறைவன்

இதமகி தங்கள் என்ப திகல்மன வாக்குக் காயம்[1]
இதமுயிர்க் குறுதி செய்தல் அகிதமற் றதுசெய் யாமை
இதமகி தங்க ளெல்லாம் இறைவனே ஏற்றுக் கொண்டிங்
கிதமகி தத்தால் இன்பத் துன்பங்கள் ஈவன் அன்றே. 103

(உரை) இதமகிதங்கள் என்பது இகல் மன வாக்குக் காயம் - இதமகிதங்களாவன, செற்றமாகிய மன வாக்குக் காயத்தினால் வருவது. அஃதெவ்வாறென்னில்; இதம் உயிர்க்கு உறுதி செய்தல் அகிதம் மற்று அது செய்யாமை - இதமாகிறது, ஆன்மாக்களுக்கு மனதினாலே நன்மையை நினைத்தும், வாக்கினாலே நல் வசனத்தை யுரைத்தும், காயத்தினாலே நன்மைகளைச் செய்தும், அன்னாதிகளைக் கொடுத்தும் உறுதி செய்தல். இதன்றி, அகிதமாவது, ஆன்மாக்களுக்கு மனதினாலே ஒரு பொல்லாப்பை நினைத்தும், வாக்கினாலே நிட்டூரஞ் சொல்லியும் காயத்தினாலே பீடை பண்ணியும் [2]பரத்திரவியங்களை அபகரித்தலுமாம்.

தத் உக்தம் —

ஶ்லோகார்த்தேந ப்ரவக்ஷ்யாமி யதுக்தம் க்ரந்த கோடிபி:|
பரோபகார: புண்யாய பாபாய பரபீடநம் ||—இதி.

மற்று அது செய்யாமை என்றது கொண்டு, யாதொரு ஆன்மாவிற்கு வருத்தம் வந்த காலத்து, அதை மாற்றத் தனக்குச் சத்தியுண்டாயிருக்கவும், உபேட்சை பண்ணினானாகில், அதுவும் தான் பண்ணின அகிதமேயாம்.

தத் உக்தம் —

அநாதாந் விகலாந் க்லீபாந் பாலவ்ருத்த க்ருஶாதுராந் |
யாநுகம்பந்தி யேமூடாஸ் தேயாந்தி நரகார்ணவம் ||—இதி.

இதமகிதங்களெல்லாம் இறைவனே ஏற்றுக்கொண்டிங்கு இதமகிதத்தால் இன்பத் துன்பங்கள் ஈவன் அன்றே-இங்ஙனம் சொல்லப்

[1] 'காயத்(து) இதமுயிர்க் குறுதி' என்றும் பாடம்.
[2] பரத்திரவியங்கள் - பிறருடைய திரவியங்கள்.



பட்ட புண்ணிய பாவங்களெல்லாவற்றையும் கர்த்தா திருவுளத்தடைத்துக்கொண்டு, அந்தப் புண்ணிய பாவங்களினாலே சுகதுக்கங்களைக் கொடுப்பன்.

அன்றே யென்பது நிச்சயமாக வென்றறிக. ௧௫

### அனுக்கிரக நிக்கிரகமிரண்டும் கருணையே

இறைவனிங் கேற்ப தென்னை இதமகி தங்கள் என்னின்
இறைபரன் உயிர்க்கு வைத்த நேசத்தின் நிலைமை யாகும்
அறமலி இதஞ்செய் வோருக் கனுக்கி ரகத்தைச் செய்வன்
மறமலி அகிதஞ் செய்யில் நிக்கிர கத்தை வைப்பன். 104

(உரை) இறைவன் இங்கு ஏற்ப தென்னை இதமகிதமங்கள் என்னின் இறைபரன் உயிர்க்கு வைத்த நேசத்தின் நிலைமையாகும் - கர்த்தாவானவன் ஆன்மாக்கள் பண்ணின புண்ணிய பாவங்களைக் கிரகிப்பானேனென்னில், சர்வாந்தர்யாமியாகிய பரமேசுவரன் ஆன்மாக்களினிடத்தில் பிரிவற்றிருக்கிற நிலைமையினாலே அவர்களிடத்தில் கிருபாவசமாகக் கிரகிப்பன்; அறமலி இதஞ் செய்வோருக்கு அனுக்கிரகத்தைச் செய்வன் - மிகுந்த தருமமாகிய இதங்களைப் பிறர்க்குச் செய்த பேர்களுக்குக் கிருபையினாலே நன்மையைப் பொருத்துவன்; மறமலி அகிதஞ் செய்யில் நிக்கிரகத்தை வைப்பன் - மிகுந்த அதருமமாகிய அகிதங்களை யார்க்குஞ் செய்த பேர்களுக்குத் துக்கத்தைப் பொருத்துவன்.

அறமலி இதமென்றது, சற்சனருக்குப் பண்ணும் இதம். மறமலி அகிதமென்றது, யக்ஞாதிகளுக்கன்றி ஆன்மார்த்தமாக இம்சையைப் பண்ணுகிறது அகிதம்.

தத் உக்தம் பௌஷ்கரே—

பரேஷாம் ஸுகதுக்காப்யாம் ஹிம்ஸாத்ரோஹ ஶதைரபி |
ஸாநஹிம்ஸேதி விஜ்ஞேயா யாஹிம்ஸா ஶாஸ்த்ர சோதிதேதி || ௧௪

ஈசுவரன் சர்வான்மாக்களிடத்திலும் பிரிவற்றிருக்கையினாலே அவர்களுக்குப் பண்ணின இதாகிதங்களைக் கிரகிப்பரென்கையால், தாம் அந்த ஆன்மாக்களை எவ்வாறு நிக்கிரகிக்கிறாரென்னில், தன்

னுடைய தேகத்தில் கிரந்தியைத் தானே கீறியும் வெதுப்பியும் தீர்ப்பதுபோல, ஆன்மாக்களைத் தண்டிப்பதும் வினை தீர்ப்பதற்காய் என்பது கூறுகின்றது.

நிக்கிர கங்கள் தாமும் நேசத்தால் ஈசன் செய்வ(து)
அக்கிர மத்தாற் குற்றம் அடித்துத்தீர்த் தச்சம் பண்ணி
இக்கிர மத்தி னாலே ஈண்டறம் இயற்றி டென்பன்
எக்கிர மத்தி னாலும் இறைசெயல் அருளே என்றும். 105

(உரை) நிக்கிரகங்கள் தாமும் நேசத்தால் ஈசன் செய்வது - பரமேசுவரன் நிக்கிரகம் பண்ணுவது கிருபையினாலேயே, அது எவ்வாறு என்னில்; அக்கிரமத்தால் குற்றம் அடித்துத் தீர்த்து அச்சம் பண்ணி இக்கிரமத்தினாலே ஈண்டு அறம் இயற்றிடென்பன் - கிரம ஈனங்களாகிய தொழில்களைச் செய்தோர்களைத் தண்டித்துப் பயமுறுத்தி முன்பு செய்த தோஷங்களை அந்தத் தண்டத்தினாலே ஒழித்து, மேல் இவ்விடத்து இன்னபடி தருமத்தைப் பண்ணென்று அருளுவன்; எக்கிரமத்தினாலும் இறைசெயல் அருளே என்றும் - நிக்கிரகம் பண்ணுவதும் அனுக்கிரகம் பண்ணுவதும் கர்த்தாவினுடைய செயலானது கிருபையே. ௧௫

மேல் இதற்கு உதாரணம்.

தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தஞ்சொ லாற்றின்
வந்திடா விடில்உ றுக்கி வளாரினால் அடித்துத் தீய
பந்தமும் இடுவார் எல்லாம் பார்த்திடில் பரிவே யாகும்
இந்தநீர் முறைமை யன்றோ ஈசனார் முனிவும் என்றும். 106

(உரை) தந்தை தாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தம் சொலாற்றின் வந்திடாவிடில் உறுக்கி வளாரினால் அடித்துத் தீயபந்தமும் இடுவார் எல்லாம் பார்த்திடில் பரிவே யாகும் - தத்தம் புதல்வர்கள் தாங்கள் தாங்கள் சொன்ன நீதிமார்க்கத்தில் நடவாதிருக்கில், பெற்ற தாயுந்தந்தையுமே கிட்டேநின்று சொல்லி மிலாற்றினாலும் அடித்துப் பொல்லாதாகிய விலங்கையும் இடுவார்கள். இதுவெல்லாம், விசாரித்துப் பார்க்கில், பிள்ளையானவன் நீதியில் நடந்து அதனால் இம்மையிலும் மறுமையிலும் சுகத்தைப் பெறவேணு மென்னும் பரிவினாலாகும்; இந்த நீர் முறைமையன்றோ ஈசனார் முனிவும் என்றும் - இப்படி மாதா பிதாக்கள் செய்யும் நீர்மை போலொத்த முறைமை யல்லவோ, பரமேசுவரனுடைய நிக்கிரகமும்? ௧௬



## வினையே பயன்தரும் என்றதன் மறுப்பு

கருமமே பலத்தைக் கொடுக்கும் கர்த்தா வேண்டா வென்னும் பூர்வமீமாம்சகரை, கர்த்தாவினாலே யல்லது கரும பலம் பொருந்தாதென்று மேல் இருபத்திரண்டு விருத்தத்தினாலே சாதிக்கின்றது.

செயல்களே பலத்தைச்செய்யும் தெய்வம்வேண் டாஇங் கென்னில்
முயலுமிச் செயல்கள் இங்கே முழுவதும் அழியும் எங்கே
பயனளிப் பனஅ ழிந்தே பலங்களைப் பண்ணும் கெட்டே
வயலிடுந் தழையும் தின்னும் மருந்தும்பின் பலிக்குமாபோல்.

(உரை) செயல்களே பலத்தைச் செய்யும் தெய்வம் வேண்டா இங்கென்னில் - ஆன்மாக்கள் செய்த வினைகளே இவ்விடத்துப் பலத்தைக் கொடுப்பது, கர்த்தா ஒருத்தன் வேண்டாம் என்னில்; முயலும் இச்செயல்கள் இங்கே முழுவதும் அழியும் எங்கே பயனளிப்பன - இவ்விடத்துப் பண்ணப்பட்ட கன்மங்களெல்லாம் அழியும். இனி எங்கே பலத்தைக் கொடுக்கும்; அழிந்தே பலங்களைப் பண்ணும் - கருமமானது நசித்தே பலத்தைக் கொடுக்கும். அது எவ்வாறென்னில்; கெட்டே வயலிடுந் தழையும் தின்னும் மருந்தும் பின் பலிக்குமாபோல் - வயலிலே மிதித்த தழையும், வியாதியுடையவனுக்குக் கொடுத்த ஔஷதமும், ஸ்தூல ரூபங்கெட்டுச் சூக்குமமாய் நின்றே பயிருக்குற்ற பலத்தையும் தேகத்துக்குச் சௌக்கியத்தையும் கொடுத்தாற்போல என அறிக. ௧௭

செய்க்கிடும் தழையும் தின்னும் திரவிய மதுவும் போல
உய்த்திடுஞ் செய்தி கெட்டே உறுவிக்கும் பலத்தை என்னில்
வைத்திடுஞ் சோறும் பாக்கும் அருந்தினர் வயிற்றின் மாய்ந்தால்
மெய்த்திடும் பலம்உ னக்கு மலமலால் வேறு முண்டோ. 108

(உரை) செய்க்கிடும் தழையும் தின்னுந் திரவிய மதுவும் போல உய்த்திடுஞ் செய்திகெட்டே உறுவிக்கும் பலத்தை என்னில்- வயலிலே இட்ட தழையும் வியாதியுடையவன் தின்ற மருந்தும் போல, செய்யுங் கருமமானது அழிந்தே பலத்தைப் பொருந்துவிக்கும் என்னில்; வைத்திடுஞ் சோறும் பாக்கும் அருந்தினர் வயிற்றின் மாய்ந்தால் மெய்த்திடும் பலம் உனக்கு மலமலால் வேறுமுண்டோ: இது வெளிப்பொருள்[1]. ௧௮

திரவியம் உவமை யன்று செய்திக்கண் திரவி யங்கள்
விரவிய இடத்தே வீந்து பலந்தரும் இம்மை அம்மை
பரவிநீ பார்நீர் அங்கி பாத்திரத் திட்ட வெல்லாம்
கரவிடும் இங்கே எங்கே பலன்கொளக் கருதி னாயே. 109

(உரை) திரவியம் உவமையன்று - நீர் புசித்தவன் வயிற்றில் திரவியம் பலம் என்றது உவமையல்ல; செய்திக்கண் திரவியங்கள் விரவிய இடத்தே வீந்து பலந்தரும் இம்மை அம்மை - இம்மையிலே தன்மத்தின் கண்ணே கொடுக்கும் திரவியங்கள் பொருந்திய இடத்தே மாய்ந்து, மறுமையிலே பலத்தைத் தரும் என்னில்; பரவி நீ பார் நீர் அங்கி பாத்திரத்திட்ட எல்லாம் கரவிடும் இங்கே எங்கே பலன் கொளக் கருதினாயே - நீ விசாரித்துப் பார், ஜலத்திலும் அக்கினியிலும் [2]பிரதிக்கிரகிப்போர் கையிலும் கொடுத்ததெல்லாம் இங்கே அழியக் கண்டோம். எங்கே பலன் பொருந்த நினைத்தாய்?

செய்தவர் மனத்தே எல்லாச் செய்தியும் கிடந்து பின்னர்
எய்தவே பலன்கள் ஈனும் என்றிடின் இருஞ்சு வர்க்கம்
பொய்யர்வாழ் நரகம் பூமி புந்தியிற் கிடந்து போந்த
ஐயனே அழகி துன்சொல் இந்திர சால மாய்த்தே. 110

[1]இதன் பொருள்: உண்பதற்காக வைக்கப்பட்ட சோறும் பாக்கு வெற்றிலை முதலியனவும், உண்டவர் வயிற்றிலே அழியப் பெற்றால், உனக்குப் பிரத்தியட்சமாகக் காணப்படும் பலன் மலமல்லாது வேறில்லை. ஆகவே, கருமம் கெட்டுப் பலன் தருமென்பது பொருந்தாது. [2]பிரதிக்கிரகிப்போர் - தானம் வாங்குவோர்.



(உரை) செய்தவர் மனத்தே எல்லாச் செய்தியும் கிடந்து பின்னர் எய்தவே பலன்கள் ஈனும் என்றிடின் - கருமத்தைப் பண்ணினவர்களுடைய புத்தியிலே அந்தக் கருமரூபமானது இருந்து, மறு சன்மத்திலே அவர்களுக்குப் பொருந்தப் பண்ணும் என்னில்; இருஞ்சுவர்க்கம் பொய்யர்வாழ் நரகம் பூமி புந்தியிற் கிடந்து போந்த ஐயனே அழகிது - பெரிய போகத்தையுடைய சுவர்க்கத்திலும், பொய்யை மெய்யென்பார் புகும் நரகிலும், பூமியிலும் போய்வந்த நீ, உன்னுடைய புத்தியிலே அவ்விடங்களிலே புசித்த சுகதுக்க ரூபங்களும் நீ பண்ணின கருமங்களும் இருந்தனவாமாகில், அழகிய தாய் இப்பொழுது சொல்லு. உனக்குத் தெரியாதாதலின்; உன் சொல் இந்திரசாலம் ஆய்த்தே - நீ முன் பண்ணின கருமங்களெல்லாம் புத்தியிலே இருந்துதானே கூடிப் புசிப்பனென்றது இந்திர சால வித்தையைப்போல ஆயிற்று. ௨௦

ஐயனே என்றது இழிபுரை.

## பயன் நுகர்விப்பவன் இறைவன்

தானஞ்செய் பொருள்த ரித்தோர் செய்தவர் தக்க செய்தி
ஊனம்பின் உறவே காண்டும் பலமுறு விப்பான் வேண்டும்
ஈனமில் செய்தி ஈசன் இடும்பணி இவைநாம் செய்தால்
ஞானங்கள் அதிகம் நோக்கி நுகர்விப்பன் வினைநோய் தீர. 111

(உரை) தானஞ் செய் பொருள் - தானதிரவியம்; தரித்தோர் - வாங்கினபேர்; செய்தவர் - தானஞ் செய்தவர்; தக்க செய்தி - தான வேளையில் பண்ணின கிரியைகள்; ஊனம் உறவே காண்டும்[1] - கெடவே காண்டும், ஆதலால்; பின் பலம் உறுவிப்பான் வேண்டும் - பின்பு பலத்தைப் பொருத்துகிறவன் ஒரு கர்த்தா வேண்டும்; ஈனமில் செய்தி ஈசன் இடும் பணி - குற்றமற்ற தான தருமாதி விதி பரமேசுவரனாலே சொல்லப்பட்டது; இவை நாம் செய்தால் - இந்தத் தானாதிகளை நாம் செய்தால்; ஞானங்கள் அதிகம் நோக்கி நுகர்விப்பன் வினைநோய் தீர - ஒரு தருமம் செய்யு

[1]காண்டும் - காணுதும்.

மிடத்து, மந்திரம் கிரியை திரவியம் மூன்று வகையாயிருக்கும். இதிலே, மந்திரலோப[1] கிரியாலோப திரவியலோபம் வரினும், தோஷமுண்டு. இவைகள் [2]உக்தப் பிரகாரமன்றி, அதிகமாகிலும் தோஷமுண்டு. ஆதலால், கர்த்தாவானவன் மிகுதி குறையை விசாரித்து, வினையாகிய ஆன்மபீடை தீருவதாகப் புசிப்பிப்பான். உக

உலகுடல் கரணங் காலம் [3]உறும்பல நியதி செய்தி
பலஇவை கொண்டு கன்மம் பண்ணுவ துண்ப தானால்
நிலவிடா திவைதாம் சென்று நினைந்துயிர் நிறுத்திக் கொள்ளா
அலகிலா அறிவ னாணை அணைத்திடும் அருளி னாலே. 112

(உரை) உலகு - காசியாதி புண்ணிய க்ஷேத்திரங்களிலே; காலம் - சூரியோபராகாதி[4] புண்ணிய காலங்களிலே; உடல் - காய வியாபார வசனாதிகளினாலே; கரணம் - ஞானேந்திரியாந்தக்கரணங் களினாலே; உறும் - பொருந்தப்பட்ட; பல நியதிசெய்தி - அனேகமாகிய அனுஷ்டானக்கிரியைகள்; பல இவை கொண்டு கன்மம் பண்ணுவதுண்பதானால் - இவை பலவற்றையும் புத்தி பண்ணிக் கொண்டு, கருமங்களைப் பண்ணி, அந்தக் கரும பலன்களைப் புசிப்பதானால்; நிலவிடா திவைதாம் சென்று நினைந்துயிர் நிறுத்திக்கொள்ளா- கீழ்ச் சொல்லிப் போந்த தேசமும் காலமும் தேகமும் கரணமும் தொழிலும் சடமாகையால், தாம்சென்று பலமாய்ப் பொருந்த அறியாது, ஆன்மா கிஞ்சிஞ்ஞனாகையால், பூர்வ சென்மங்களிலே செய்த கருமமிது அதற்குப் பலமிது என்றறிந்து கரும பாவத்துக்குத் தேகாதிகளை மாயையிலே உண்டாக்கி நிறுத்திக் கொள்ள அறியாது. ஆதலால்; அலகிலா அறிவன் ஆணை அணைத்திடும் அருளினாலே - சர்வஞ்ஞனாகிய பரமேசுவரனுடைய கிரியா சத்தியானது, மாதாவானவள் பிள்ளைக்கு வியாதி வந்த காலத்துக் கசப்பாதிகளையும், நின்ற காலத்தில் பால் முதலான மதுர பதார்த்தங்களையும் கிருபையுடனே கொடுக்குமாபோல, சுகதுக்கங்களைச் சேர்க்கும். உஉ

[1]லோபம் - குறைவு. [2]உக்தப்பிரகாரம் - சொல்லியபிரகாரம். [3] 'உறுபலம்' என்று பாடம். [4]உபராகம் - கிரகணம்.



## புண்ணிய கருமமும் பயனும்

ஒழுக்கம்அன் பருள்ஆ சாரம் உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவம்தா னங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவ டக்கம் அறிவொடர்ச் சித்த லாதி
இழுக்கிலா அறங்க ளானால் இரங்குவான் பணிய றங்கள். 113

(உரை) ஒழுக்கம்-குலதருமம் வழுவாமை; அன்பு-மாதாபிதாக்களிடத்தில் பக்தி; அருள் - சர்வபூத தயை; ஆசாரம் - வர்ணாச்சிரமோசிதமான சௌசஆசமன ஸ்நானாதிகள்; உபசாரம்-[1]அதிதிசற்காரம்; உறவு-ஞாதிமுதலான பந்துக்களிடத்திலேசினேகம்; சீலம்-சாத்விகபாவம்;வழுக்கிலாத்தவம்தானங்கள்-நியமித்தவிரதம்விடாத தபசு, திரவிய சுத்தியும் சிரத்தையுமுடைய தானங்கள்; வந்தித்தல் வணங்கல் - பெரியோர்களிடத்திலே [2]நைச்சியம் பகர்தல்; வாய்மை - சத்தியமே சொல்லுகை; அழுக்கிலாத் துறவு - மனம் பற்றில்லாத சன்னியாசம்; அடக்கம் - குலதனவித்தியாதிக்கத்தால்[3] அகங்காரமின்றி [4]வினயபரனா யிருக்கை; அறிவொடு அர்ச்சித்தல் - பூசா [5]விதானத்தை நன்றாக அறிந்து பூசை பண்ணுதல்; இழுக்கிலா அறங்களானால் - இவ்வாறு குற்றமிலாத தருமங்களைப் பண்ணினால், ஆதிபரமேசுவரன்; இரங்குவான் பணியறங்கள் - நாமிட்ட பணியாகிய தருமங்களைப் பண்ணினானென்று கிருபை பண்ணுவானென வறிக. உ௩

## இச்சித்த தெய்வ வழிபாடு - சிவனே உத்தேசியன்

மனமது நினைய வாக்கு வழுத்தமந் திரங்கள் சொல்ல
இனமலர் கையிற் கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுத லகற்றி வாழும் செயல்அற மானால் யார்க்கும்
முனமொரு தெய்வம் எங்கும் செயற்குமுன் னிலையாம் அன்றே.

(உரை) மனமது நினைய வாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல இனமலர் கையிற் கொண்டு அங்கு இச்சித்த தெய்வம் போற்றிச்

[1]அதிதிசத்காரம் - அதிதியைப் பூசித்து உபசரித்தல். [2]நைச்சியம் - தழுவுதல். [3]ஆதிக்கம்-மேன்மை. [4]வினயபரன் - வணக்கமே பிரதானமாக உடையவன். [5]விதானம் - விதி.

சினமுதல் அகற்றி வாழும் செயல் அறமாகுல் - காமக் குரோதம் முதலானவைகளைத் தவிர்ந்து, மனசினுலே தியானித்து, வாக்கினுலே மந்திரங்களைச் சொல்லி வாழ்த்தி, [1]சுவேதாதி புஷ்பங்களை [2]மிச்சிரம் பண்ணுமல் [3]தத்தத் வர்க்கங்களையே கையிற் கொண்டு அவ்விடத்துத் தனக்கு இஷ்டதேவதையைப் பூசித்து வாழுந் தரும கிரியைக்கு ; யார்க்கும் முனமொரு தெய்வம் எங்கும் செயற்கு முன்னிலையாம் அன்றே - எல்லாத் தேவர்களுக்கும் முன்னேனாகிய ஒருவனே, ருத்திரனென்று வேதங்கள் சொல்லும் மகாதேவனே, [4]உத்தேசியனுக நின்று பலத்தைக் கொடுப்பன்.

சுவேதாதி புஷ்பங்களை மிச்சிரம் பண்ணுமல், என்றதற்குச் சம்மதி, காமிகே—

ஏகவர்ண க்ருதா மாலா ஶ்ரேஷ்டேதி பரிகீர்த்திதா।
பஹுவர்ணைஸ் ததா புஷ்பைர் மத்யமா பரிகீர்த்திதா॥
புஷ்பபத்ரைஃ க்ருதாமாலா கீர்த்திதாஸா கநீயஸீ।—இதி. உச

வேதத்தில் இந்திராதியான அனேக தேவர்களை அர்ச்சிக்கச் சொல்லியிருக்க, இவ்விடத்து நீர் சிவனொருவனே உத்தேசியனென்று சொல்லுவானேன் என்ற சங்கைக்கு உத்தரம்.

**யா**தொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி அங்கே
மாதொரு பாக னூர்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படும்இ றக்கும் பிறக்கும்மேல் வினையுஞ் செய்யும்
ஆதலால் இவையி லாதான் அறிந்தருள் செய்வன் அன்றே.

(உரை) யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி அங்கே மாதொரு பாகனூர்தாம் வருவர் - யாதொரு தெய்வத்தை உத்தேசித்துக் கொண்டர்ச்சிக்கிறீரோ அந்தத் தெய்வத்தை, சிவன் தம்முடைய சமவாய சத்தியினுலே அதிஷ்டித்து நின்று, அந்தப் பூசையைக் கண்டு பலத்தைக் கொடுப்பர். அந்தப் பூசிக்கப்பட்ட தெய்வமோ என்னில் ; மற்று அத் தெய்வங்கள் வேதனைப்படும் இறக்கும் பிறக்கும் மேல்வினையும் செய்யும் - பரமேசுவரனே யல்லாத தெய்வங்கள் ஒவ்வொரு காலத்திலே துக்கங்களையும் அனுபவிக்கும், இறப்பதும் பிறப்பதுஞ் செய்யும், பிறந்து அதன் மேல் இருவினைகளையுஞ் செய்யும் ; இவையிலாதான் அறிந்தருள் செய்வன் அன்றே - ஆகையினுலே, சுகதுக்கமும் பிறப்பு மிறப்பும் புண்ணியமும் பாவமுமில்லாத பரமேசுவரனே இவன் செய்த பூசையை அறிந்து பலத்தைக் கொடுப்பன். அந்தப் பிரமேந்திராதி தேவர்களும் சிவனையே அர்ச்சிப்பார்கள். அந்தச் சிவனே பிரதமோத்தேசியன்.

[1]சுவேதம் - வெள்ளை. [2]மிச்சிரம் பண்ணல் - கலத்தல். [3]தத்தத் வர்க்கம் - அந்தந்தக் கூட்டம். [4]உத்தேசியன் - முக்கியன்.



தத் உக்தம் கூர்மபுராணே ஶிவகீதாயாம்—

ஸோஹம் யாதா வியாதாச காலோக்னிர் விஶ்வதோமுகஃ।
நமாம் பஶ்யந்தி முநயஃ ஸர்வேபி த்ரிதிவௌகஸஃ॥

ப்ரும்ஹாணோ மநவஶ் ஶக்ராயேஶாங்யே ப்ரதிதௌஜஸஃ।
க்ருஹ்ணந்தி ஸததம் வேதா மாமேகம் பரமேஶ்வரம்॥

யஜந்தி விவிதையாக்னி ப்ரும்ஹணா வைதிகைர்மகைஃ।
ஸர்வேலோகா நமஸ்யந்தி ப்ரும்ஹாலோக பிதாமஹஃ॥

த்யாயந்தி யோகிநோ தேவம் பூததிபதிமீஶ்வரம்।
அஹம்ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தா சைவ பலப்ரதஃ।

ஸர்வதேவ தநுர்பூத்வா ஸர்வாத்மா ஸர்வஸம்ஸ்தித।—இதி.

தேவிகாலோத்தரே ச —

ப்ரும்ஹாதிபிர் தேவ மநுஷ்ய நாக
கந்தர்வ யக்ஷாப்ஸரஸாம் கணைஶ்ச।
மவைரநேகை ரஹமேவ பூஜ்யோ
மாமேவ ஸர்வே ப்ரவதந்தி வேதாஃ॥
தபோபி ருக்ரைர் விவிதைஶ்ச தாநைர்
மாமேவ ஸர்வே ப்ரதிபூஜயந்தி।— இதி. உரு

மேல் இதற்கு உதாரணம்.

இங்குநாம் சிலர்க்குப் பூசை இயற்றினால் இவர்க ளோவந்
தங்குவான் தருவார் அன்றே அத்தெய்வ மத்த னைக்காண்
எங்கும்வாழ் தெய்வ மெல்லாம் இறைவனா ணையினால் நிற்ப
தங்குநாம் செய்யும் செய்திக் காணைவைப் பால்அ ளிப்பன்.

(உரை) இங்கு நாம் சிலர்க்குப் பூசை இயற்றினால் இவர்களோ வந்துஅங்கு வான் தருவார்-இந்தப் பூமியின் கண்ணே நாம் பிரமனாதிகளுக்குப் பூசை பண்ணினால், இவர்களேயோ அந்தச் சுவர்க்கத்திலே பலத்தைக் கொடுக்கிறவர்கள்; அன்றே - அல்லவே, ஆகையால்; அத்தெய்வம் அத்தனைக்காண் - அந்தத் தெய்வங்கள் நாம் பண்ணும் பூசையாகிய போகத்தை அனுபவிப்பார்கள், ஒரு பலத்தைக் கொடுக்கமாட்டார்கள்; எங்கும் வாழ் தெய்வமெல்லாம் இறைவனாணையினால் நிற்பது - எங்கெங்கே யிருந்து பூசைகொள்ளுந் தேவர்களும் தேவ சுவாமியாகிய சிவனுடைய அதிகார சத்தி அதிஷ்டரா யிருப்பார்கள்; அங்கு நாம் செய்யும் செய்திக்கு ஆணை வைப்பால் அளிப்பன் - நாம் பண்ணும் பூசைத் தொழிலுக்குப் பலத்தைத் தன்னுடைய அதிகார சத்தியை அந்தத் தேவதைகளிடத்திலே வைத்திருக்கையால், சிவனே கொடுப்பன். ௨௬

மேல் ஆன்மாக்கள் பண்ணுங் கருமங்களை யெல்லாம் அறிந்து பலத்தைக் கொடுக்கிறவன் சிவனே யாகையால், சர்வகர்மமும் சிவனை உத்தேசித்தே பண்ணுவது புத்தி என்பது உணர்த்துகின்றது.

காண்பவன் சிவனே யாகில் அவனடிக் கன்பு செய்கை
மாண்பறம் அரன்தன் பாதம் மறந்துசெய் அறங்க ளெல்லாம்
வீண்செயல் இறைவன் சொன்ன விதியறம் விருப்பொன் றில்லான்
பூண்டனன் வேண்டல் செய்யும் பூசனை புரிந்து கொள்ளே.

(உரை) காண்பவன் சிவனேயாகில் அவனடிக்கு அன்புசெய்கை மாண்பறம் - எவ்வழிப்பட்ட தேவர்களை வழிபடினும் அதைக் கண்டு பலங் கொடுப்பவன் சிவனே ஆகையால், அந்தச் சிவனுடைய பாதாரவிந்தங்களிலே பத்தி பண்ணுகிறதே



சிறப்புடைய தருமம்; அரன் தன்பாதம் மறந்து செய் அறங்களெல்லாம் வீண் செயல் - சிவனே பிரதானமாகவும், பிரமாதி தேவர்கள் அங்கமாகவும் சிவாக்ஞையால் [1]சௌராதி பூசைகள் பண்ணுகிறோ மென்றும் பண்ணாமல், சிவன் பரத்துவ மென்பதை மறந்து தாந்தாம் பூசைபண்ணும் தேவனையே பரத்துவ மென்று விசாரித்துப் பண்ணில், பண்ணின பூசாபலம் விபரீதமாம்; இறைவன் சொன்ன விதியறம் விருப்பொன்றில்லான் பூண்டனன் வேண்டல் செய்யும் - கர்த்தாவானவன் விருப்பு வெறுப்பு ஒன்றும் இல்லாதவனாயினும், தான் சொன்ன வேதாகமத்தின்படி பூசையைச் செய்வோர் பத்தியைத் தரித்தனன், அதனால் பத்தர்கள் வேண்டிய போக மோக்ஷங்களைக் கொடுப்பவனாதலால்; பூசனை புரிந்து கொள்ளே - நீயும் சிவபூசையைச் செய்து அபீஷ்டத்தை வேண்டிக் கொள்வாயாக. ௨௭

சீவன் தேகேந்திரியாதி ரகிதனாகையால், சிவனைப் பூசை பண்ணுவது எவ்வாறு என்ன, மேல் உத்தரங் கூறுகின்றார்.

தாபரஞ் சங்க மங்கள் என்றிரண் டுருவில் நின்று
மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க் கருளை வைப்பன்
நீபரன் தன்னை நெஞ்சில் நினைவையேல் நிறைந்த பூசை
ஆய்பரம் பொருளை நாளும் அர்ச்சிநீ அன்பு செய்தே. 118

(உரை) தாபரஞ்சங்கமங்கள் என்றிரண்டுருவில் நின்று மாபரன் பூசைகொண்டு மன்னுயிர்க்கு அருளைவைப்பன் - சிவலிங்க முதலாய அசர மூர்த்திகளினும் சிவபத்தராகிய சரமூர்த்திகளிடத்திலும் அநன்னியமாக நின்று, பத்தர்கள் பண்ணும் பூசையை மகிழ்ந்து, பூசை பண்ணினபேர்க்கு மகாதேவர் கிருபை பண்ணுவார்; நீ பரன் தன்னை நெஞ்சில் நினைவையேல் நிறைந்த பூசை - அந்தச் சிவனை இருதயத்திலே தியானித்து, மானசபூசை பண்ணுவாயாகில், [2]பாஹ்ய பூசைபோல [3]நியூநாதிகங்களும் இம்சையும் அசுசியும் சூதகாதி தோஷங்களும் காயக்கிலேசமும் இல்லாத குறைவற்ற பூசையாம்.

---

[1]சௌராதி பூசை - சூரிய பூசை முதலான பூசை; சௌரம் - சூரியம் சம்பந்தமுடையது. [2]பாஹ்ய பூசை - புறப்பூசை. [3]நியூநம் - குறைவு.

தத் உக்தம் ஶிவதர்மோத்தரே —

ஸ்வதேஹாயதநஸ்யாந்தர் மநஸாஸ் தாப்ய ஶங்கரம் ।
ஹ்ருத் பத்மபீடமத்யஸ்தம் த்யாநயஜ்ஞேந பூஜயேத் ॥

த்யாநயஜ்ஞ: பரஶ்ஶுத்த: ஸர்வதோஷ விவர்ஜித: । [வரை: ॥
தேநேஷ்ட்வா முக்திமாப்நோதி பாஹ்யைஶ்ஶுத்தைஶ்சநாத்

ஹிம்ஸாதிதோஷ முக்தத்வாத் விஶுத்தஶ் சித்ரஸாதந: ।
த்யாநயஜ்ஞ: பரஸ்தஸ்மாதபவர்க ஃபலப்ரத: ॥—இதி.

இந்த மானசபூசை கூடாதிருக்கில்; ஆய் பரம்பொருளை நாளும் அர்ச்சி நீ அன்பு செய்தே - அந்த ஞானபூசை கூடும்படிக்கு விசாரித்து, சிவலிங்கத்தினிடத்தும் மகேசுவரரிடத்தும் பக்தியுடனே நாடோறும் பூசை பண்ணுவாயாக. உஅ

இதற்கு முன்விருத்தத்திலே, (117) 'அவனடிக் கன்பு செய்கை மாண்பு, அவன் தன் பாதம் மறந்துசெய் அறங்களெல்லாம் வீண் செயல்' என்றதற்கு உதாரணங் கூறுகின்றது.

அரனடிக் கன்பர் செய்யும் பாவமும் அறம தாகும்
பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி
நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே. 119

(உரை) அரனடிக் கன்பு செய்யும் பாவமும் அறமதாகும் பரனடிக் கன்பிலாதார் புண்ணியம் பாவமாகும் - சிவனிடத்தில் பத்தியினாலே பண்ணும் பாவமும் புண்ணியமேயாம், சிவனிடத்தில் பத்தியில்லாமற் பண்ணும் புண்ணியமும் பாவமேயாம். அது எவ்வாறு என்னில் ; வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே - பிரமாவினுடைய புத்திரனாய தசப்பிரசாபதிகளில் ஒருவனான தக்ஷப் பிரஜாபதி, மகாவிஷ்ணு முதலான தேவர்களைக் கூட்டிப் புண்ணியங்களுக்கெல்லாம் அதிகமாகிய யக்ஞத்தைச் சிவனை யன்றிப் பண்ண, அந்த



யக்ஞமும் அழிந்து, [1]யஜமானனுக்குந் தலைபோய், யக்ஞத்தில் வந்திருந்த தேவர்களுக்கும் [2]பராபவமும் அங்கச் சேதமும் வந்தது. மனுஷ்யரிலே பிரமசாரியாயுள்ள சண்டேசுவர நாயனார் சிவபத்தியினாலே சிவாபராதியாகிய தம்முடைய பிதாவை மழுவினாலே வெட்ட, பித்ருவதமும் பிரமஹத்தி என்கிற தோஷமும் பொருந்தாமல், அந்தத் தேகத்திலேயே சிவசாரூப்பியத்தைப் பெற்றார். இந்த [3]அன்னுவய வியதிரேக திருஷ்டாந்தத்தினாலே, சர்வ கருமங்களும் சிவனை உத்தேசித்தே புத்திமான் பண்ணக் கடவன். உகூ

## தராபதிபோல வினைப்பயனை இறைவன் தருவான்

மேல் வேத மார்க்கத்திலே நடந்தோரையும் நடவாதோரையும் சுவர்க்க நரகங்களிலே சிவன் சேர்ப்பன் என்னும் முறைமை உணர்த்துகின்றது.

மறைகளீ சன்சொல் அச்சொல் வழிவரா உயிரை வைக்கும்
சிறைகொள்மா நிரய மிட்டபணிசெய்வோர் செல்வத் தோடும்
உறையுமா பதிகள் உம்பர் உலகங்கள் யோனிக் கெல்லாம்
இறைவனா ணையினால் இன்பத் துன்பங்கள் இசைவ தாகும்.

(உரை) மறைகள் ஈசன் சொல் அச்சொல் வழிவரா உயிரை வைக்கும் சிறைகொள் மாநிரயம் - வேதங்கள் சிவனுடைய வாக்கியம். அந்தச் சிவனுடைய வாக்கியமான வேதத்திலே செய்யச்சொன்னதைச் செய்யாமலும், தவிரச் சொன்னதைத் தவிராமலும் நடந்த ஆன்மாக்களை வைக்குஞ் சிறைச்சாலையே நரகங்கள்; இட்டபணிசெய்வோர் செல்வத்தோடும் உறையும் மாபதிகள் உம்பர் உலகங்கள் - சிவன் வேதத்தில் அனுக்கிரகம் பண்ணினபடியே நடந்த ஆன்மாக்கள், ஐசுவரியத்துடனே பொருந்தும் ஸ்தலங்கள் இந்திரலோகாதிகள். கேவலம் பாவமே பக்குவமாயின் நரகமும், புண்ணியமே பக்குவமாயின் சுவர்க்கமுமடைவர். புண்ணிய பாவங்கள் அவந்துவ

[1]யஜமானன் - யாகஞ் செய்கிறவன். [2]பராபவம் - அவமானம். அங்கச் சேதம் - சரீரக் குறைவு. [3]அன்வயம் - உண்மை. வியதிரேகம் - இல்லாமை.

மாயினர்க்கு இம்மையிலே சுகதுக்கங்களைப் புசிப்பதாக யோனிஜாதராவர்கள்; யோனிக்கெல்லாம் இறைவன் ஆணையினல் இன்பத்துன்பங்கள் இசைவதாகும் - யோனிஜாதமாகிய மத்திய லோகத்தவர்க்கும் புரியட்டக ரூபத்திலுண்டான யாதனுசரீரத்தையுடைய நரகத்தவருக்கும் சூக்குமதேகத்திலே நின்றும் பூதசார சரீரத்தையுடைய கருமதேவர்களாகிய சுவர்க்கவாசிகளுக்குச் சுகமும், நரகவாசிகளுக்குத் துக்கமும், மத்தியலோகவாசிகளுக்குச் சுகதுக்கங்களும் ஈசுவராக்ஞையினலே உண்டாம்.

தத் உக்தம் ஹாரதே—

ஆஜ்ஞோஜந்து ரநீஸோயம் ஆத்ம நஸ்ஸு வஹ்வயோ ||
ஈஸ்வரப்ரேரிதோ ஙச்சேத் ஸ்வர்ஙவாஸ்வரஹ்மேவவா||-இதி.

மேலும் அதற்கே உதாரணம்.

ஆணையால் அவனி மன்னன் அருமறை முறைசெய் யாரை
ஆணையிற் றண்டஞ் செய்தும் அருஞ்சிறையிட்டும் வைப்பன்
ஆணையின் வழிசெல் வோருக் கரும்பதி செல்வம் நல்கி
ஆணையும் வைப்பன் எங்கும் ஆணையே ஆணை யேகாண். 121

(உரை) ஆணையால் அவனி மன்னன் அருமறை முறைசெய்யாரை ஆணையிற்றண்டஞ் செய்தும் அருஞ்சிறை இட்டும்வைப்பன் - சிவனுடைய ஆக்ஞா சத்தியானது பொருந்துகையால், பூபதியாயுள்ளான், வேதத்தினுடைய வழியிலே வர்ணுசிரம தருமமானது நடவாதபேரை சிவாக்ஞையான வேதத்திலே இன்ன அபராதத்துக்கு இன்ன தண்டம் இத்தனை நாள் இன்னபடி சிறை வைக்கவென்று சொன்னபடியே தண்டித்துச் சிறையிலும் வைப்பன்; ஆணையின் வழிசெய்வோருக்கு அரும்பதி செல்வம் நல்கி ஆணையும் வைப்பன் - சிவாக்ஞையாகிய வேதமார்க்கத்திலே நடக்கச்சொல்லி ராசாவானவன் கட்டளையிட்டபடியே நடப்பவருக்கு, அவர்களுக்கு முன் அரிதாயிருந்த கிராமாதிகளையும் கொடுத்து, ஐசுவரியத்தையுங் கொடுத்து, தன்னுடைய அதிகார சத்தியையும் வைத்துப் பிரபுவாகப் பண்ணுவன் ஆகையால் நிக்கிரகானுக்கிரக கர்த்தா

# ஞானியார் சுவாமிகள் நினைவு நிதி

ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளுடைய நினைவு நிதிக்குக் கீழே குறித்துள்ள அன்பர்கள் பொருளுதவி புரிந்துள்ளார்கள். ஏனைய அன்பர்களும் தாங்கள் விரும்பிக் கொடுக்கக் கருதும்பொருளை விரைவில் கொடுத்து உதவி புரியுமாறு வேண்டுகிறேன்.

| திருமிகு | | ரூ. | அ. |
|---|---|---|---|
| க. அரங்கசுவாமி முதலியாரவர்கள் | ... | 108 | 0 |
| அ. கு. காமாக்ஷியம்மையாரவர்கள் | ... | 100 | 0 |
| மயிலைகிழார் இளமுருகனாரவர்கள் | ... | 100 | 0 |
| திவான்பகதூர். டி. எம். நாராயணசாமி பிள்ளையவர்கள் | | 50 | 0 |
| ராவ்பகதூர். சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் | | 50 | 0 |
| ராவ்சாஹிப்-எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் | ... | 50 | 0 |
| ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் | ... | 25 | 0 |
| மு. அருணசலம் பிள்ளையவர்கள் | ... | 20 | 0 |
| தெ. பழ. சித. சதாசிவம் செட்டியாரவர்கள் | ... | 16 | 0 |
| தி. க. சுந்தரம் பிள்ளையவர்கள் | ... | 10 | 0 |
| தலைவர், சைவ சித்தாந்த சபை, பழநி | ... | 10 | 0 |
| ரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளையவர்கள், ஸ்ரீவில்லிபுத்தூர் | ... | 10 | 0 |
| கா. இராமநாதன் செட்டியாரவர்கள் | ... | 6 | 4 |
| கொழும்பு அருள் தியாகராசா அவர்கள் | ... | 5 | 0 |
| என். எஸ். இரத்தினசபாபதி செட்டியாரவர்கள் | ... | 5 | 0 |
| K. A. சிவஞானம் பிள்ளை அவர்கள், வழக்கறிஞர், அம்பாள்சமுத்திரம் | ... | 5 | 0 |
| ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், தஞ்சாவூர் | ... | 5 | 0 |
| | ஆக | 575 | 4 |

ம. பாலசுப்பிரமணியன்,
காரியதரிசி

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 15. No. 11

# சமாஜ வெளியீடுகள்

# CATALOGUE OF SAMAJAM BOOKS

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| அப்பர் தேவாரம் | ... | 1 | 0 |
| சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் | .... | 0 | 12 |
| திருவாசகம் ,, | .... | 0 | 10 |
| ,, (பல ஆராய்ச்சி அகராதிகளுடன்) | .... | 0 | 12 |
| திருவாசகம் மூலம் | ... | 0 | 2½ |
| திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு—குறிப்புரையுடன் | .... | 0 | 9 |
| அ, கூ திருமுறைகள் ,, | .... | 1 | 2 |
| திருமந்திரம் — (இரண்டாம் பதிப்பு) | .... | 1 | 0 |
| பதினோராந் திருமுறை ,, | .... | 0 | 11 |
| மெய்கண்டாரும் சிவஞான போதமும் | .... | 0 | 8 |
| சங்கநூற்புலவரகராதி | .... | 0 | 1 |
| தலயாத்திரைப் படம் | .... | 0 | 1 |
| திருப்புகழ் (அருணகிரியார் அருளியவை முற்றும்) | | 3 | 0 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறை | ... | 0 | 10 |
| சீவக சிந்தாமணி | .... | 1 | 8 |
| சிவஞானபாடியம் | .... | 1 | 0 |
| சிவஞானபோதச் சிற்றுரை | .... | 0 | 8 |
| சிவஞான சித்தியார் உரை | .... | 0 | 12 |
| சிவப்பிரகாசம் மூலமும் உரையும் | .... | 1 | 0 |
| சித்தாந்த அஷ்டகம் | .... | 1 | 0 |
| சித்தாந்த சாத்திரம் மூலமும் உரையும் | .... | 3 | 4 |

தபாற்கூலி, பார்சல் செலவு முதலியன வாங்குவோர் செலுத்த வேண்டும். முன்பணம் அனுப்புக.

**சைவ சித்தாந்த மகா சமாஜம்**

22-A, *கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை*

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, by T. V. Volaganathan (Publisher) for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.